DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | இளையராஜா (Lw - 6) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 06.11.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் முட்டாஞ்செட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வாதி பிரேமாவை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டு கொண்டதால் இந்த கையொப்பம் நான் போட்டு கொடுத்தேன். **(**பார்வை மகஜரில் உள்ள **1**வது கையொப்பம் அ**.**சா**.**ஆ**.4** ஆகவும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள **1**வது கையொப்பம் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது 19.11.2003ம் தேதி மாலை 6.30 மணியளவில்

நான் எதிரி துரைமுருகன் வீட்டின் அருகே இருந்தபோது ஆஜர் எதிரி துரைமுருகன் வாதி போபிநாத்தை முன் விரோதம் காரணமாக பொது இடத்தில் ஆபாச வார்த்தைகளால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தினார் என்றும் பின்னர் தடியால் கோபிநாத்தின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்துகொண்ட காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் 20.11.2023ம் தேதி மாலை 4 மணியளவில் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் பின்னர் சம்பவ இடத்தில் இருந்து சம்பவத்திற்கு பயண்படுத்தப்பட்ட தடியை கைப்பற்றுதல் மகஜர்மூலம் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**